பயிலரங்க எண்ணிக்கை: 120 நாள்: 08.05.2026

## மொழியியல் புலம்

நடத்தும்

## பாட்டியல் இலக்கண மரபுகள்

## Traditions of Treatise on Poetic Composition

பயிலரங்கம் – 02

(18.5.2026 - 27.5.2026)

**அறிவிப்பும் அழைப்பும்**

இயல், இசை, நாடகம் என முப்பிரிவுகளாகத் தமிழ் செழித்தோங்கி நிற்கிறது. இவற்றுள் இயல் என்னும் இலக்கியமானது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இன்றளவும் நிலைத்துத் தனிச்சிறப்பிடம் பெறுகிறது. இத்தகைய பழம்பெரும் இலக்கிய மரபைக்கொண்ட தமிழ்மொழியில் பாட்டியல் என்னும் வகைமையும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய பாட்டியல் நூலானது பிரபந்தங்கள் என்று சொல்லக் கூடிய சிற்றிலக்கியங்களின் இலக்கணம், அவற்றைப் பாடவேண்டிய முறை, பாட்டுடைச் செய்யுளுக்குரிய மாந்தர், அவர்தம் இயல்பு ஆகியவை குறித்துக் கூறுகிறது. மேலும் பாட்டுடைத் தலைவன், பாட்டியல் பாடும் புலவர்கள், இலக்கிய அரங்கேற்றம் செய்யும் அவையின் இயல்பு ஆகியவை குறித்தும் எடுத்தியம்புகிறது. இத்தகைய பாட்டியல் இலக்கணமானது தொல்காப்பியச் செய்யுளியலில் கூறிய யாப்பிலக்கணத்தில் இருந்து வேறுபடுகிறது.

தொடர்நிலைச் செய்யுள்களுக்கு இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்கள் தோன்றிய பின்னர் அவற்றிற்கு இலக்கணம் எழுதும் பொருட்டு எழுந்தவையாகும். இத்தகைய பாட்டியல் நூல்கள் பதினோராம் நூற்றாண்டிலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டு வரை மட்டுமல்லாது இன்றளவும் வழக்கில் இருந்து வருகின்றன. இந்திரகாளியம், நவநீதப்

பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், பன்னிரு பாட்டியல், பிரபந்த தீபிகை, பிரபந்த மரபியல், வரையறுத்த பாட்டியல், வச்சணந்திமாலை, வெண்பாப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் போன்றன பாட்டியல் நூல்களில் குறிப்பிடத்தக்கன. இலக்கிய வகைமைகளில் அகம், புறம், பக்தி சார்ந்து மனித வாழ்க்கை ஓட்டத்தின் இயல்பினைப் பிரதிபலிக்கும் சிற்றிலக்கிய வகைமையின் கட்டமைப்பினைக் கூறும் பாட்டியல் நூல் குறித்து ஆய்வு செய்யும் பொருட்டும் நீண்ட மரபுத் தொடர்ச்சியைக் கொண்ட பாட்டியல் இலக்கணத்தின் இன்றைய வளர்ச்சிநிலை குறித்தும் ஆய்ந்து, ஆழ்ந்து அறியும் நோக்கில் இப்பயிலரங்கம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இப்பயிலரங்கில் மரபிலக்கண அறிஞர் பெருமக்கள் பயிற்றுவிக்க உள்ளனர். பல்கலைக்கழகம்/கல்லூரிகளில் தமிழியல், மொழியியல் ஆகிய துறைகளில் முனைவர் பட்ட / ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களை இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை – 30
- பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 18.5.2026 முதல் 27.5.2026 முடிய 10 நாட்கள்.
- பயிலரங்கு நேரம்: காலை 10.00 - 1.00 & மாலை 2.00 - 5.00.
- பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
- பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/mDzrVNs7vZ45sPu89 என்ற

இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

- நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் **14.5.2026** காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
- செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **15.5.2026** அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- இப்பயிலரங்கில் பங்கேற்போர் **38** அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
- பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**